பிரபலமானது.

1983 ஜூலைக் கலவரத்தின் போது தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

## நியாயமான, நீதியான விசாரணைகளையும் நம்பகமான நடவடிக்கைகளையும்தான் சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது

நியமித்தபோது அதன் மீது எவரும் நம்பிக்கை கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இந்த ஆணைக்குழுவின் மூலம் தமக்கு நியாயம் கிடைக்கும் என்று எப்படி நம்பவில்லையோ அதுபோலவே, அனைத்துலக மனிதஉரிமை நிறுவனங்களும், அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற பல நாடுகளும் இந்த ஆணைக்குழு நம்பகமான விசாரணகளை நடத்தும் என்றோ, நியாயமான வகையில் செயற்படும் என்றோ நம்பிக்கை வெளியிடவில்லை.

ஏற்கெனவே இதன் விசாரணைகளின் நம்பகத் தன்மை குறித்து கேள்விகள் எழுந்திருந்த போதும், கடுமையானதொரு சர்வதேச அழுத்தங்கள் நிறைந்துள்ள சூழலில் இந்த ஆணைக்குழு தமது அறிக்கையைத் தயாரித்து முடித்துள்ளது.

கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களின் மரணங்கள் உறுதியான போதிலும் அது எத்தகைய சூழலில், எப்படி, யாரால் நிகழ்த்தப்பட்டது என்பது பற்றிய தெளிவும், அதற்குப் பொறுப்பானவர்கள் மீதான குற்றச்சாட்டுகளும் உறுதி செய்யப்பட வேண்டியுள்ளன.

அதனை ஆணைக்குழு செய்திருக்குமேயானால், அதன் அறிக்கையை சர்வதேச சமூகம் ஓரளவுக்கேனும் நம்பகமானது என ஏற்றுக்கொள்ளும்.

இல்லையேல் இது நம்பகமான்தொன்றல்ல என்று நிராகரிக்கப்படும் நிலை உருவாகும்.

உண்மைகளையும், நம்பகத்தன்மையையும் நிரூபிக்க வேண்டுமானால் இத்தகைய மரணங்களுக்கு காரணமானவர்கள் பற்றிய

அரசாங்கம் தீவிரமான பொறுப்புக்கூறும் நடவடிக்கைளை உறுதிப்படுத்தும் என்று நம்புகிறோம். இது மிகவும் முக்கிமானது.

தனது நலன்களை பகிர்கின்ற சக்திகளுடன் உறவைப் பேணும் அதேவேளை, மனிதஉரிமை விவகாரங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நிபந்தனையின் அடிப்படையிலும் உறவுகளை அமெரிக்கா பேணும் என்பதே ஒபாமா நிர்வாகத்தின் கொள்கை

இந்த இரண்டு அணுகு முறைகளுக்கும் இடையில் போட்டிகள் இல்லை.

ஆனால், ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்க வேண்டியது அவசியம்.' என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆக தனது நலன்களைப் பகிர்ந்து கொள்வதால் மட்டும், அமெரிக்கா உறவைகளைப் பேணி விடாது என்று அவர் கூறியிருப்பது முக்கியமானதொரு விடயம்.

அமையுமா என்பதை விரைவிலேயே தெரிந்து கொள்ள முடியும்.

அறிக்கையை கையளிப்பதுடன் ஆணைக்குழுவின் வேலை முடிந்து விடப் போகிறது. அதுஏற்கெனவே கலைக்கப்பட்டும் விட்டது.

இந்த அறிக்கையின் உள்ளடக்கமும் அதன் மீதான நடவடிக்கைளும் அடுத்து பேசப்படப் போகின்ற முக்கியமான விடயங்களாக இருக்கும்.

இனி எல்லாமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையில் தான் உள்ளது.

இதனைப் பகிரங்கப்படுத்துவது தொடக்கம், பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் வரை அவரே தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்.

ஆக, அவர் எடுக்கப் போகும் முடிவுகள் தான் போரினால் ஏற்பட்ட வடுக்களை ஆற்றுகின்ற திறன் கொண்டதா என்பதை சர்வதேசம் மதிப்பீடு செய்வதற்கு வழி செய்யப் போகிறது.